15.02.2024 MCOP No. 3/2017

சாட்சி : PW 1 கனகம்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை : (3ம் எதிர்மனுதாரர்)**

இந்த விபத்து 2015ம் ஆண்டு நடந்தது. நானும், என் கணவரும் வேட்டைக்காரன் பட்டியிலிருந்து சடையன்காடுக்கு வந்தோம். அதற்கு திருச்சி-இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலையை கடந்துதான்செல்ல வேண்டும். விபத்து நடக்கும்போது எக்ஸெல் வாகனத்தை என் கணவர்தான் ஓட்டிச் சென்றார். நான் பின்னால் அமர்ந்திருந்தேன். என் கணவர் தலைக் கவசம் அநிந்திருந்தார். அவ்வாறு தலை கவசம் அணிந்திருந்ததாக மனுவிலோ, நிரூபணவாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் கணவருக்கு ஓட்டுநர் உரிமம் இருந்தது. ஆனால் தாக்கல் செய்யவில்லை. விபத்து ஏற்படுத்திய டாடா ஏசி வாகனம் தேவகோட்டையிலிருந்து காரைக்குடிக்கு சென்று கொண்டிருந்தோம். நாங்கள் வடக்கிலிருந்து தெற்காக சாலையை கடக்கும்போதுதான் இந்த விபத்து ஏற்பட்டது. விபத்து நடந்த இடம் நான்கு சாலைகள் சந்திக்கும் இடம். என் கணவர்தான் டாடா ஏசி வாகனம் வருவதை கவனிக்காமல் சாலையை கடந்து விபத்து ஏற்படுத்திவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயங்கள் ஆறிவிட்டன என்று சொன்னால் சரியல்ல. என் கணவருக்கு லேசான காயங்கள் தான் ஏற்பட்டது. அவர் இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை. என் கணவர் விவசாய வேலைதான் பார்த்து வருகிறார். நான் வேட்டைக்காரன்பட்டியில் ஒரு தேநீர் கடையில் வேலை பார்த்துவந்தேன். நான் அவ்வாறு வேலை பார்க்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. எனக்கு ஒரே மகன் படித்துக்கொண்டிருக்கிறார். இந்த விபத்து என் கணவரின் கவனக்குறைவால்தான் ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் கேட்டுள்ள இழப்பீட்டு தொகை அதிகமானது என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திரு.மு.வீரணன் M.A., L.L.M.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.